செய்திவெளியீடு எண்:05 நாள்: 03.04.2018.

***தேனி மாவட்டம்***
***படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான***
***வேலை வாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-***

*****

தேனி மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம் நடத்தும் படித்த மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம், சின்னமனூர் வட்டாரத்திலுள்ள V.O.C, தொழில் பயிற்சி நிறுவன வளாகத்தில் 07.04.2018 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் நடைபெறவுள்ளது. இம்முகாமில் சென்னை, கோயம்புத்தூர், திருப்பூர், மற்றும் மதுரை போன்ற பெருநகரங்களிலிருந்து டெக்ஸ்டைல்ஸ், ரெடிமேட் கார்மெண்ட்ஸ், மோட்டார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் கம்பெனி, மற்றும் கட்டுமானத்துறை சார்ந்த நிறுவனம் சார்ந்த நிறுவனம் போன்ற பல்வேறு வேலைவாய்ப்பு தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டு தகுதியுடைய இளைஞர்களை (ஆண்/பெண்) தேர்வு செய்து வேலை வாய்ப்புகள் வழங்கப்பட உள்ளது. இம்முகாமில் சின்னமனூர் வட்டாரத்திற்குட்பட்ட கிராம மற்றும் நகராட்சி / பேரூராட்சிப் பகுதிகளைச் சார்ந்த இளைஞர்கள் (ஆண்/பெண்) கலந்து கொள்ளலாம்.

மேலும், இம்முகாமில் 18 முதல் 35 வயதுக்குட்பட்ட 8-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை படித்தவர்கள் மற்றும் பட்டயப்படிப்பு (Diploma), பட்டப்படிப்பு (Degree) ஐ.டி.ஐ (ITI), பொறியியல் படிப்பு (Engg) படித்தவர்களும் கலந்து கொள்ளலாம். இம்முகாமின் மூலம் தகுதியான இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு அவரவர் தகுதிக்கேற்ப தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. இம்முகாமில் கலந்து கொள்பவர்கள் தங்களின் கல்விச்சான்று, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை (அசல் மற்றும் நகல்கள்) மற்றும் 2 பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள் ஆகியவற்றுடன் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**